# பாடல்கள்

-சுகந்தி



## நான் பெரியவனானதும்

பாடங்கள் நடத்துவேன்
பண்பை வளர்ப்பேன்
நான் ஒரு ஆசிரியனாவேன்!

விண்ணில் தேடுவேன்
மண்ணைத் தோண்டுவேன்
நான் ஒரு அறிஞனாவேன்!

வண்ணங்கள் அறிவேன்
சித்திரங்கள் வரைவேன்
நான் ஒரு ஓவியனாவேன்!

கற்பனை செய்வேன்
காவியம் படைப்பேன்
நான் ஒரு கவிஞனாவேன்!

சட்டத்தைக் காப்பேன்
நல்வழி காட்டுவேன்
நான் ஒரு காவலனாவேன்!

வரவு செலவு பார்ப்பேன்
வசதிகள் பெருக்குவேன்
நான் ஒரு கணக்கராவேன்!

நோய்களைத் தடுப்பேன்
சுகாதாரம் காப்பேன்
நான் ஒரு மருத்துவனாவேன்!

அன்னை வழி நடப்பேன்
அன்பு காட்டுவேன்
நான் ஒரு நல்ல
மனிதனாவேன்!



## பறக்குது பறக்குது பட்டம்

கடலைப் போன்ற வானத்தில்
நீந்தும் சின்ன மீன்களாம்!

சின்னச் சிட்டுக் குருவியாய்
மேலே மேலே உயருமாம்!

அம்மா பின்னல் போலவே
அழகாய் வாலும் இருக்குமாம்!

கண்ணுக்கெட்டா உயரத்தில்
காற்றைக் கிழித்துப் பறக்குமாம்!

வண்ண வண்ணக் கோலத்தில்
வானில் நடனம் ஆடுமாம்!

